**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, DISTRICT MUNSIF COURT**
**PATTUKKOTTAI**

**IA 140/18 in O.S : 09/2018**
**Date: 30.08.2019**
**Deposition of witness for : CW1 - Advocate Commissioner**
**Name: Arivarasi**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day of August 2019.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் சமூக நீதிமன்றத்தால் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டு வழக்கு சொத்தினை பார்வையிட்டு என் அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு கொடுக்கப்பட்ட வாரண்டில் சர்வே எண் 316/1 என்ற சொத்தினை பார்வையிட சொல்லியிருந்தது. நான் ஆய்வு மேற்கொண்டபோது அந்த சர்வே எண்ணானது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சர்வே எண் 316/1 ஏ, 1 பீ.....என்றவாறு சுமார் 40 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. என்னிடம் இந்த வழக்கின் முக்கிய பிரச்சனையான சர்வே எண் 316/1 ஏ-யில் சர்வே எண் 317/6 வருகிறதா என்று பார்க்க சொன்னார்கள். நான் சர்வேயர் மூலம் அளந்து அத்து வைத்து பார்த்த பிறகு வாதி தரப்பில் குறிப்பாணை கொடுக்கப்பட்டது. அந்த குறிப்பாணையில் 1ம் பிரதிவாதியின் வீட்டை 03.03.1977 கிரயப்பத்திரம் மூலம் அளந்து காட்ட சொன்னார்கள். அந்த சொத்தானது வேறு சர்வே நம்பரில் இருப்பதாகவும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவித்ததாலும் என் வாராண்டில் அவ்வாறு சொல்லப்படவில்லை என்பதால் நான் அளக்கவில்லை. நான் முதல்நிலை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் ஏற்கனவே ஒரு அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதில் ஏ, பீ என்பது காம்பவுண்ட் சுவர். தற்போது நான் பார்த்தபோது அதில் இடித்துவிட்டு இரும்பு கதவு வைத்திருந்தது தெரியவந்தது. மேலும் அந்த புல எண் சம்மந்தமான உட்பிரிவுகளை அளக்கமுடியாத சூழ்நிலை உள்ளது. அதில் நிறைய கட்டுமானங்கள் உள்ளன. நான் ஏற்கனவே ஐ.ஏ.20/18 மனுவில் தாக்கல் செய்திருந்த அறிக்கையுடன் இணைந்த வரைபடத்தில் ஐ.ஹெச் என்று குறிப்பிட்டுள்ள பகுதி வழியாகவும் வாதியின் சொத்திற்கு வருவதற்கு வழி உள்ளது . தற்போது அதில் இரும்பு கம்பி வேலி போட்டுள்ளனர்.

Sd/- *Arivarasi*
*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/- G. Sathiakumar,
District Munsif, Pattukkottai,(FAC)